# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 130/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சண்முகவேல் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on14.07.2025.

**முதல் விசாரணை**

1. நான் அய்யலுமீனாட்சி நகரில் பின்புறமுள்ள அண்ணாநகரில் வசித்து வருகிறேன். ரெயில்வேயில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு ஒரே மகன். பெயர் சூர்ய பாண்டியன். அவர் மடத்துக்குளம் எஸ்பிஐ வங்கியின் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். அவரும் எங்களுடன் தான் வசித்து வருகிறார். கடந்த 21 1 2025 ஆம் தேதி அன்று எங்களது மருமகள் ஸ்வேதா அறுவை சிகிச்சை செய்திருந்ததால் அவரை பார்ப்பதற்காக கோயம்புத்தூர் கங்கா மருத்துவமனைக்கு நானும் என் மனைவி என் மகன் பேரக் குழந்தைகளுடன் வீட்டை பூட்டிவிட்டு சென்றோம். மறுநாள் என் மகன் கோயம்புத்தூரில் இருந்து மடத்துக்குளத்திற்கு நேராக வேலைக்கு சென்று விட்டார்.
2. வீட்டுக்கு வரும் பொழுது போன் செய்யுமாறு என்னிடம் கூறினார். 22.01.2025 ஆம் தேதி அன்று காலை 6 அல்லது 6.30 இருக்கும் நானும் என் மகனும் ஒன்றாக வீட்டுக்கு வந்து வீட்டை திறந்து பார்த்தோம். வீட்டின் முன் மெயின் டோர் பூட்டப்பட்டிருந்தாக தெரிந்தது. ஆனால் கை வைத்து பார்த்தபோது திறந்திருந்தது.

மெயின் டோரில் இருந்தா பூட்டு மற்றும் அது சம்பந்தமான பொருள்கள் உடைக்கப்பட்டு இருந்தது. வீட்டிற்குள் 3 பெட்ரூமும் உடைக்கப்பட்டிருந்தது.

3. வீட்டில் உள்ளே நுழைந்த உடன் தெற்கு பார்த்த ரூமில் இருந்த பெட்ரூமில் வைக்கப்பட்டிருந்த துணிமணிகள் சிதறி கிடத்தது. அந்த பீரோ அந்த பீரோவில் என் மருமகளின் கம்மல் ஒரு செட், இரண்டு அரை பவுன் காசு 28, மருமகளின் 2 செட் கொலுசு, 2 பேரன்களன் கொலுசு –2 செட், அரைஞாண் கொடி ஆகியவை திருடு போயிருந்தது. கிழக்கு பார்த்த ரூமில் எனது மனைவியின் பீரோ உடைக்கப்பட்டு அதிலிருந்து துணிமணிகளும் சிதறி கிடந்தது.
4. என் மகனின் ஒரு பவுன் மோதிரம், என் மனைவியின் வெள்ளி கொலுசு ரெண்டு செட்டு ஆகியவை திருடு போயிருந்தது. அதற்க பக்கத்தில் தெற்கு பார்த்த மாதிரி என் மகனின் பெட்ரூமில் டிரஸ்ஸிங் டேபிள் உடைக்கப்பட்டு சிதறி கிடந்தது. அதில் எதுவும் இல்லை. தங்க நகை மொத்தம் 2 ¾ பவுனும் ½ கிலோ வெள்ளி நகையும் திருடுபோயிருந்தது. நாங்கள் போலீசார் வரும் வரை வெளியில் இருந்தோம். வந்த பிறகுதான் உள்ளே சென்று உடைக்கப்பட்டுள்ள விவரங்களும் திருடப்பட்டு இருந்தது விவரங்களை பற்றியும் தெரிந்து கொண்டோம்.
5. என்னிடம் காட்டப்படும் புகார் நான் எழுதியது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. **புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் விரைவில் கண்டுபிடித்து தருவதாக கூறினார்கள். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து மீட்கப்பட்ட தங்க நகைகளை மட்டும் பெற்று கொண்டோம். வெள்ளி நகைகள் கிடைக்கவில்லை என்று போலிசார் சொன்னார்கள். **½ பவுன் தங்க காசு 2 எண்ணிக்கை அசா.பொ. 1 என்றும், கம்மல் தோடு ஒரு செட் அசா.பொ. 2 என்றும், மோதிரம் அசா.பொ. 3 என்றும் குறியீடு செய்ய்ப்படுகிறது.** நகைகள் குறியீடு செய்யப்பட்ட பிறகு மீண்டும் சாட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகாரில் காணாமல் போன நகைகளின் மாடல்கள் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ள பொருட்களில் முழுவதுமாக உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால் சரிதான், வெள்ளி சம்பந்தப்பட்ட பொருட்கள் எதுவும் கிடைக்கவில்லை. உங்கள் வீட்டின் மிக அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றாலும் நிறைய வீடுகளில் மத்தியில் உங்கள் வீடு அமைந்துள்ளது என்றாலும் சரிதான். உங்கள் வீட்டின் டோரை

உடைக்கும் சத்தம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு கேட்க வாய்ப்பு இருக்கும் என்றால் நாங்கள் விசாரித்து பார்த்தோம், யாரும் கேட்கவில்லை என்று கூறினார்கள், உங்கள் ஏரியாவை பொருத்தவரையில் வாட்ச் மேன் உள்ளார்கள் என்றால் நைட்டில் கூர்க்காக்கள் வருவார்கள். உங்கள் வீட்டு பகுதியில் கேமரா உள்ளதா என்றால் கடைசியாக உள்ள வீட்டில் டிஎஸ்பி உள்ள வீட்டில் கேமரா உள்ளது இரவு என்பதால் சரியாக தெரியவில்லை,

2. கரண்டை ஆப் செய்துள்ளார்கள் முதலில் ஒரு நபர் லைட்டை ஆஃப் செய்ய ஏறி இறங்கியுள்ளார்கள். ஒருவர் ஒருவர் ஏறி இறங்கியது தெரிய வருகிறது மற்றொருவர் வந்தது போல் தெரியவில்லை. நகைகள் எப்போது வாங்கியது என்றால் 2021 ல் என் மருமகள் திருமணத்தின் போது வாங்கினோம், நகைகள் அதன் பின்னிட்டும் வாங்கினோம். நகைகள் வாங்கியதற்கு சம்பந்தமாக விழிகள் நீதிமன்றத்தில் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றால் இல்லை. காவல்துறையினர் போன் செய்து வந்தவுடன் வந்தார்கள். புகார் இப்படி எழுத வேண்டும் என்று கூறினார்களா என்றால் என்ன நடந்தது என்று எழுதி தருமாறு கூறினார்கள் நான் எனது சொந்த கருத்தில் தான் எழுதிக் கொடுத்தேன்.
3. வீட்டில் வைத்த புகார் எழுதினீர்களா காவல் நிலையத்தில் வைத்து எழுதினீர்களா என்றால் வீட்டில் வைத்து எழுதினேன். அதற்கு பின்னிட்டு காவல் நிலையம் அன்றைய தினம் சென்றீர்களா என்றால் மறுநாள் அழைத்து விசாரித்தார்கள். சாட்சி பட்டியலில் உள்ளவர்கள் உங்கள் வீட்டுக்கு அருகில் குடியிருப்பவர்கள் என்றால் ஆமாம்.
4. பட்டியல் சாட்சி கார்த்தி உங்களுக்கு தெரிந்த நபரா என்றால் இல்லை. பட்டியல் சாட்சி முகமது சபீர் உங்களுக்கு தெரிந்த நபரா என்றால் இல்லை. நீங்கள் வெளியில் செல்வது அக்கம் பக்கத்தினருக்கு தெரியும் என்றால் தெரியாது. நாங்கள் சென்றபோது 7.30 மணி இருக்கும். நீங்கள் குடியிருக்கும் வீடு வாடகை வீடு என்றால் ஆமாம். அதில் வேறு போர்ஷன் உள்ளது என்றால் இல்லை. ஒரே போர்சன் தான் உள்ளது உங்கள் வீட்டை சுற்றி மூன்று புறமும் மிக நெருக்கமான வீடுகள் உள்ளது என்றால் ஆமாம். அக்கம் பக்கம் வீடுகளில் ஆட்கள் குடியிருக்கிறார்கள் என்றால் ஆமாம்.
5. நீதிமன்றத்தில் இருந்து வாங்கிய பொருட்கள் உங்களுடையது அல்ல என்றால் சரியல்ல. அதை பொருட்களை தான் கொடுத்தார்கள். அதே பொருளை கொடுக்கவில்லை என்றாலும் அதே போன்ற பொருட்களை கொடுத்துள்ளார்கள் என்றாலும்

இல்லை போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 130/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குணசேகரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராமசாமி நாயுடு | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on14.07.2025.

முதல் விசாரணை

நான் அய்யலு மீனாட்சி நகரின் பின்புறம் அண்ணாமலையார் நகரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 21.01. 2025 ஆம் தேதி அன்று அசா.1 வீட்டில் திருடு போயிருந்தது. அது சம்பந்தமாக 22 அல்லது 23 ஆம் தேதியில் வந்து உதவி ஆய்வாளர் ஒருவர் அங்கு வந்து விசாரித்தார் அந்த இடத்தை வரைபடமாக வரைந்து சாட்சி கையொப்பம் கேட்டார். நான் கையொப்பம் செய்தேன் மற்றொரு நபர் கையொப்பம் செய்துள்ளார். யார் என்று எனக்கு தெரியவில்லை நான் விவரங்களை தெரிந்து கொண்டுதான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியும். பார்வை மகசர் அசா.ஆ .2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. சாட்சி சொன்ன அசா.1 பாண்டி என்பவருக்கு எதிர்த்த வீடா அல்லது பக்கத்து வீடா என்றால் பக்கத்து வீடு. கையெழுத்து போட்டதில் என்ன விபரம் எழுதி இருந்தது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். வரைபடம் எத்தனை மணிக்கு

வரைந்தார்கள் என்றால் காலை 9.30– 10.00 மணி இருக்கும் நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து கழித்து போட்டீர்கள் என்றால் இல்லை. அசா.1 பாண்டி என்பவர் உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் இல்லை.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.